

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.5.2025) புதுடெல்லியில், காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களையும், மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களையும் அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, நாடாளுமன்ற மக்களவை கழக குழு தலைவர் டி.ஆர்.பாலு உடனிருந்தார்.

# திருமதி சோனியா காந்தி - ராகுல் காந்தியுடன் சந்திப்பு: சிறப்பு அரவணைப்பு - குடும்பத்துடன் இருப்பது போன்ற உணர்வு அளிக்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் பெருமிதம்!

புதுடெல்லி, மே 25 -

புதுடெல்லியில் நேற்று நடைபெற்ற 'நிதி ஆயோக்' கூட்டத்தில் பங்கேற்பதற்காக புதுடெல்லிக்கு வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் இரவு திருமதி சோனியா காந்தி மற்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில், திருமதி சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோரை சந்திக்கும் போது ஒரு சிறப்பு அரவணைப்பு இருக்கிறது என்றும் இது வெறும் சந்திப்பாக இல்லாமல், குடும்பத்துடன் இருப்பது போன்ற உணர்வையே அளிக்கிறது என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**திருமதி சோனியா காந்தி அவர்களையும், அன்புச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களையும் தில்லியில் அவர்கள் வசிக்கும் இல்லத்தில் ஒவ்வொரு முறை சந்திக்கும்போதும் ஒரு சிறப்பு அரவணைப்பு இருக்கிறது. ஒருபோதும் இது வெறும் சந்திப்பாக இல்லாமல், குடும்பத்துடன் இருப்பது போன்ற உணர்வையே அளிக்கிறது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.





பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பதிலடியாக, இந்தியா மேற்கொண்ட 'ஆபரேஷன் சிந்தூர்' தாக்குதல் தொடர்பாகவும், தீவிரவாதிகளுக்கு ஆதரவாக பாகிஸ்தான் செயல்படுவது குறித்தும் சர்வதேச நாடுகளுக்கு விளக்கம் அளிக்க, அமைக்கப்பட்ட, அனைத்துக் கட்சியினரையும் உள்ளடக்கிய கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையிலான எம்.பி.க்கள் குழு – நேற்று ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் ரஷ்ய நாட்டின் உயரதிகாரிகள், பிரதிநிதிகள் குழுவுடன் உரையாடினர். அனைத்து வகையான பயங்கரவாதத்தையும், தோற்கடிப்பதற்கான இந்தியாவின் தெளிவான மற்றும் நிபந்தனையற்ற உறுதியையும், அதை ஒழிப்பதற்கான நமது சமரசமற்ற நிலைப்பாட்டையும் தேசிய உறுதியையும் சர்வதேச விவகாரங்களுக்கான ரஷ்ய எம்.பி.க்கள் குழுவின் தலைவர் லியோனிட் ஸ்லட்ஸ்கி மற்றும் உறுப்பினர்களிடம் வலியுறுத்தினர்.

# இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை சீர்குலைந்துவிட்டது!

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு

புதுதில்லி, மே 23-

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை சீர்கு லைந்துவிட்டதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

பஹல்காம். பயங்கரவாதத் தாக்குதல் குறித்தும் அதைத் தொடர்ந்து இந்தியாபாகிஸ்தான் இடையே ஏற்பட்ட பதற்றம் குறித்தும் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பதில் அளிக்கும் காட்சி அடங்கிய விடியோவுடன் இணைத்து காங்கிரஸ் கட்சி சமூக ஊடகத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டது. அந்தப் பதிவுடன் அக் கட்சியின் முன்னாள் தலைவரும் மக்களவை 'எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி வெள்ளிக்கிழமை பதிவு ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது: பாகிஸ்தானைக் கண்டிப்பதில் ஒரு நாடுகூட நம்மை ஆதரிக்காதது குறித்து வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் விளக்கம் அளிப்பாரா? இந்தியா பாகிஸ் தான் இடையே மத்தியஸ்தம் செய்யுமாறு அமெரிக்க அதிபர் டிரம்ப்பை



கேட்டுக் கொண்டது. யார்? இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை சீர்குலைந்து விட்டது என்று ராகுல் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக ராகுல், எக்ஸ் வலை தனத்தில் வியாழக்கிழமை வெளியிட்ட பதிவில் 'பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் சுயகௌரவ விவகாரத்தில் சமரசம் செய்து கொண்டுள்ளார். பாகிஸ்தானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையை நிறுத்தி யதன் மூலம் தேசத்தின் நலன்களை அவர் தியாகம் செய்தது ஏன்? மோடி அவர்களே, வெற்று உரைகளை நிகழ்த்துவதை நிறுத்துங்கள். பயங்கரவாதம் குறித்த பாகிஸ்தானின் கருத்தை நீங்கள் நம்பியது ஏன்?

போர் நிறுத்த விவகாரத்தில்அமெரிக்கஅதிபர்டிரம்ப்புக்கு பணிந்ததன் மூலம் நீங்கள் இந்தியாவின் நலன்களை தியாகம் செய்தது ஏன்? கேமராக்களுக்கு முன்னாள் மட்டும் உங்கள் ரத்தம் கொதிப்பது ஏன்? என்று கேள்வி எழுப்பியிருந்தார். இதனிடையே, வெளியுறவு அமைச்சரை ஜெயச்சந்திர ஜெய் பாக காங்கிரஸ் தலைவர் அலுவலகத்தில் அக்கட்சியின் செயலாளராக இருக்கும் கௌரவ் பந்தி கூறுகையில் 'ஜெயச்சந்திர ஜெய்சங்கர் நம் நாட்டின் வெளியுறவு அமைச்சராக நீடிக்கும் ஒவ்வொருநாளும் அவர் ஒரு சுமையாக இருப்பது மட்டுமின்றி இந்தியாவின் தேசிய நலன்களுக்கு தீவிரமான அச்சுறுத்தலாகவும் இருக்கிறார். தாமதமே இன்றி அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும். மேலும், அவரது தோல்விகள் குறித்து சுதந்திரமான விசாரணை நடத்தப்பட 'வேண்டும்' என்றார். பாகிஸ்தானில் உள்ள பயங்கர வாத முகாம்களுக்கு எதிராக இந்திய ராணுவம் வலுவான முறையில் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தபோது திடீரென்று அத்தாக்குதலை நிறுத்தியது ஏன்? என்று மத்திய அரசுக்கு காங்கிரஸ் கட்சி கேள்வி எழுப்பி வருகிறது.

# டெல்லியில் கொரோனா பரவல் அதிகரிப்பு !

புதுடெல்லி, மே 25-

டெல்லியில் கொரோனா பரவல் அதிகரித்து வருவதால் சிறப்பு வார்டுகளை தயார் நிலையில் வைத்திருக்குமாறு அனைத்து மருத்துவமனைகளுக்கும் அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து டெல்லி சுகாதார அமைச்சர் பங்கஜ் சிங் வெளியிட்டுள்ள அறிப்பில், டெல்லியில் புதிதாக 23 பேருக்கு கொரோனா தொற்று பதிவாகியுள்ளதாகவும், நோயாளிகளின் வெளிநாடு அல்லது வெளிமாநில பயணங்கள் குறித்து ஆய்வு செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், டெல்லியில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும், கொரோனா சிறப்பு வார்டுகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும், போதுமான படுக்கைகள், ஆக்சிஜன், தடுப்பூசிகள், மருந்துகளை தேவையான அளவு இருப்பு உள்ளதை மருத்துவமனைகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் வீரியம் குறைந்த கொரோனா தொற்று தற்போது பரவத் தொடங்கியுள்ள நிலையில், இந்த அறிவிப்பை டெல்லி அரசு வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




மதுரையில் வருகிற 31ஆம் தேதி மாலை கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரை மாநகராட்சியின் முதல் மேயர் எஸ்.முத்து அவர்களின் திரு உருவ வெண்கல சிலையை திறந்து வைக்க உள்ளார் அதற்கான முன்னேற்பாடுகளை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., ஆகியோர் ஆய்வு செய்தனர். உடன் கழக நிர்வாகிகள் மா.ஜெயராம், சின்னம்மாள், மூவேந்திரன், பி.டி.மணிமாறன், முத்து கணேசன், எம்.பி.ராஜா, புண்ணியமூர்த்தி, சீனி ரமேஷ், ராஜா, யோகராஜா, அசோக்குமார், செல்வராஜ், லேத் சிவா, கஜேந்திரன் உள்ளிட்டோர் உள்ளனர்.

## அரசியலமைப்புச் சட்டத்தைச் சிதைக்க முயலும் பாசிசத்தை

# ஜனநாயக சக்திகள் ஓரணியில் திரண்டு நின்று வீழ்த்துவோம்!

## கந்தர்வக்கோட்டை அம்பேத்கர் சிலை திறப்பு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் 23.5.2025 ஒடுக்கப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க, ஆதிக்கவாதிகளை நோக்கி அறிவு சாட்டையைச் சுழற்றிய சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய திருவுருவச் சிலையை புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டையில் கொட்டும் மழையில் திறந்து வைத்தார். உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எஸ்.ரகுபதி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை, மே 25-

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டையில் சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய திருவுருவச் சிலையை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கொட்டும் மழையில் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

அப்போது அவர் அண்ணல் இயற்றிய அரசியலமைப்புச் சட்டத்தை சிதைக்க முயலும் பாசிசத்தை ஜனநாயக சக்திகள் ஓரணியில் திரண்டு வீழ்த்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்து எழுச்சிமிக்க உரையாற்றினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:-

எனது அரசியல் வழிகாட்டியாக எப்போதும் பெருமையாக சொல்லக் கூடிய எழுச்சிதமிழர்திருமாவளவன் அவர்களின் முன்னிலையில், அவரோடு இணைந்து அம்பேத்கர் அவர்களின் சிலையை திறக்கின்ற வாய்ப்பை அளித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றிலிருந்து தொடங்கி மூன்று நாட்களுக்கு பல்வேறு அரசு நிகழ்ச்சிகள், கழக நிகழ்ச்சிகள் பயணிக்க உள்ளேன். அதில் முதலில் சிறப்பு நிகழ்ச்சியாக அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிலையை திறந்து வைத்துவிட்டு, மக்கள் பணி ஆற்ற அடுத்த மூன்று நாட்கள் செல்ல இருக்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு வரும்போது, இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடக்குமா என்று தெரியவில்லை. நன்றாக மழை பெய்துகொண்டு இருக்கிறது. எவ்வளவு தடங்கல் வந்தாலும், இந்த சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிலையை திறந்து வைத்து இருக்கிறோம்.

**மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி.**

இதிலிருந்து என்ன தெரிகிறது. எவ்வளவு தடங்கல்கள் வந்தாலும், நம் தலைவர் அவர்கள் 2024ஆம் ஆண்டு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை அமைத்தார்கள். ஒன்றிய பா.ஜ.க அரசு மிருக பலத்தோடு நாங்கள் ஆட்சி அமைப்போம் என்று சொன்னார்கள். ஆனால், கடைசியில் அவர்களால் மெஜாரிட்டி பெற முடியவில்லை. அதற்கு, முழுக்காரணம் நம் முதலமைச்சர் அவர்கள், நம் தலைவர் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி.

**பாசிச பா.ஜ.க அரசு**

தமிழ்நாட்டில் 39க்கு 39 தொகுதிகளில் தமிழ்நாட்டு மக்கள் நம்மை வெற்றி பெற வைத்தார்கள். அதனால்தான், இப்போது மெஜாரிட்டி இல்லாமல், கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு இயங்கிகொண்டு இருப்பதால் ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசு இன்னும் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றாமல் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இல்லையென்றால், அதையும் மாற்றி இருப்பார்கள். அதற்கு தடைப் போட்டவர் நம் தலைவர், நம் தமிழ்நாடு அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, இங்கு அண்ணன் திருமாவளவன் அவர்கள் சொன்னதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலை சிறுத்தைகள் கட்சி, காங்கிரஸ் பேரியக்கம், ஆகியோர் இணைந்தது தேர்தல் கூட்டணி கிடையாது. இது கொள்கை கூட்டணி. அதனால்தான், தமிழ்நாட்டு மக்கள் நமக்கு ஆதரவு தெரிவித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

நம் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசு சிறப்புடன் செயலாற்றி வருகிறது. நான்காண்டுகள் முடிந்து, இன்னும் 9 மாதங்களில் 2026ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் வர இருக்கிறது. நம் முதலமைச்சர், கழகத் தலைவர் சொல்லி இருக்கிறார். குறைந்தது 200 தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி வெற்றிபெற வேண்டும் என்று. நிச்சயம் வெல்லும், அதில் முதல் தொகுதியாக கந்தர்வக் கோட்டை தொகுதியும் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கிறது.

நம் முதலமைச்சர் சொல்வது தான். தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! என்று கூறிக் கொண்டு இந்த வாய்ப்பை அளித்த சிலை அமைப்புக் குழுவினருக்கும், எழுச்சி தமிழர் அண்ணன் திருமாவளவன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.ரகுபதி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன்,

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் துரை வைகோ, எம்.எம்.அப்துல்லா, கழக இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர் நா.இளைய ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் சின்னதுரை, மருத்துவர் வை.முத்துராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிதை பித்தன், பெரியண்ணன் அரசு, பெரம்பலூர் கிட்டு, மாநகர மேயர்கள் சண்.இராமநாதன், திலகவதி செந்தில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் இளமதி அசோகன், டாக்டர்.அம்பேத்கர் அவர்களின் சிலை அமைப்பு குழுவின் ஒருங்கிணைப்பாளர் சுந்தம்பட்டி நாராயணசாமி, பரமசிவம், தமிழ் அய்யா, வெங்கடாச்சலம், சண்முகம், சேட்டு, இராமகிருஷ்ணன், மாயகண்ணு, நாராயணசாமி, சித்திரவேல், வெள்ளைச்சாமி, வைரமூர்த்தி உள்பட பலரும் கலந்துகொண்டனர்.